**நாரம்மல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நாரம்மல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகளை பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 2,008,064 ஆன மானியத் தொகை மீண்டெழும் வருமானத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) கரம்பே மீ வெவ கினிபெந்த ஏலவிற்பனை காணியில் ரூபா 50,000 பெறுமதி இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான ரூபா 720,025 பெறுமதியான 44 காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,807,890 ஆன பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருடத்தை விட கூடிய தீர்வுசெய்யப்படாத மீதி ரூபா 12,974,366 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 26,639,323 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருடத்தை விட கூடிய காலம் தீர்வு செய்யப்படாமல் இருந்த மீதி ரூபா 6,889,667 ஆக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் காணப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா. 179,815,765 பெறுமதியான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சான்றுறுதி செய்ய முடியாமல் போயிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 2005 இன் 02 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டம் (துண்டாக்கல் கட்டுப்பாடு) சட்டத்தின் 23(அ) பிரிவு | - | 43 ஏக்கர் 02 ரூட் கூட்டு அளவிலான கரம்பேவத்த மற்றும் ரணகெனபிட்டிய காணியை துண்டுகளாக பிரிப்பதற்கு காணி துண்டாக்கல் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) | | |
| 218 ஆம் விதி | - | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | 13,838 | கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 570 | 573,538 | 02 ஆண்டுகள் காலம் கடந்த 53 வைப்புக்கள் தொடர்பாக வைப்பு தொடர்பான அட்டவணையொன்று தயாரிக்கப்பட்ருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 571 | - | ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,890,271 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 17,849,631 ஆக இருந்தது

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | வீதவரி மற்றும் வரி | 5,956 | 5,010 | 4,617 | 1,739 | 5,941 | 4,472 | 4,472 | 1,415 |
| ii | வாடகை | 21,792 | 22,307 | 22,448 | 101 | 21,761 | 10,890 | 10,706 | 474 |
| iii | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,151 | 2,355 | 2,355 | - | 2,226 | 6,633 | 6,633 | - |
| iv | ஏனைய வருமானம் | 72,815 | 79,641 | 79,577 | 17,423 | 70,554 | 13,804 | 17,341 | 23,392 |
| | மொத்தம் | 102,714 | 109,313 | 108,997 | 19,263 | 100,482 | 35,799 | 39,152 | 25,281 |

### குறிப்பு

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 108 மில்லியனான வருமானத்தினுள் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானத்திலிருந்து கிடைத்த ரூபா 05 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் ரூபா 109 மில்லியன் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 108 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளில் நிலுவையுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 19 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,364,687 தொகையான நிலுவையில் மீளாய்வாண்டில் ரூபா 999,481 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், பட்டியலிடப்பட்ட ரூபா 4,495,019 இல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை தொகை ரூபா 1,676,840 ஆக இருந்தது.

(ஆ) தம்பதெனிய உப அலுலகத்தினால் 70 வீதவரி அலகுகளின் இறுதி கொடுப்பனவிற்காக 2017 யூலை சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கு பின்னரும் கொடுப்பனவு செய்யப்படாத பிரிவுகளுக்காக ஆதனங்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குருணாகல் வீதி இடது வீதவரி இலக்கம் 35 இற்குரிய கீழ் மாடியின் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 108,732 தொகையான வருடாந்த மதிப்பீடு 2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 100,038 வரை குறைவடைந்திருந்தது.

### 2.2.4 குத்தகை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளர்வாண்டிற்குரிய வியாபார நிலைய வாடகையாக ரூபா 65,753 மற்றும் கேள்வி மீது வைப்பு வாடகையாக ரூபா 35,518 தொகை ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) நாரம்மல பழைய வாரச்சந்தை தொகுதியின் 52 கடைகள் மற்றும் நாரம்மல வாரச்சந்தை தொகுதியின் 22 மரக்கறி கடைகள் மற்றும் 05 தற்காலிக மரக்கறி கடைகள் என்பவற்றின் வாடகை 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய புதிய மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 203,900 வருமானமொன்று சபைக்கு கிடைக்காமல் போயிருந்தது.

### 2.2.5 ஏனைய வருமானம்

சபை எல்லைக்குள் 05 பெயர் பதாதைகளுக்காக ரூபா 108,000 தொகை அறவிடப்படாமல் இருந்ததுடன் 02 பெயர் பதாதைகளுக்காக ரூபா 38,000 குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் ரூபா 4,912,180 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 12,511,265 தொகையான முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவிற்கு இணங்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிறப்பிக்கப்பட்டிருந்த 42 உப விதிகளுக்கு மேலதிகமாக மாகாண சபையால் விதிக்கப்பட்டிருந்த 10 உப விதிகள் சபையினால் பின்பற்றப்பட்டிருந்தன.

#### (ஆ) நிறைவேற்றப்படாத பணிகள்

மீளாய்வாண்டில் ரூபா 3,930,000 ஆன பாதிடப்பட்ட 51 செயற்திட்டங்கள் வெவ்வேறு காரணங்களின் பேரில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (இ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை அடையாமை

ஒளியாதெனிய உயிரியல் வாயு பிரிவின் நிர்மாண வேலைகள் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளாமை காரணமாக மயானகூடத்தின் செயற்பாடுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட வாயு அளவொன்றினை அப்பிரிவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

#### (ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் சபையினால் 45650 கிலோ கிராம் உற்பத்தி செய்து அதில் 43305 கிலோ கிராம் விற்பனை செய்தமையால் ரூபா 428,050 ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 15,931,711 ஆன செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது.

#### (உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கல் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன் சபைக்கு தொடர்புடைய அபிவிருத்தி நோக்கங்கள் மற்றம் இலக்குகள் இனங்காணப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்நோக்கங்களுக்காகவும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 450,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 250,670 செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை

மீளாய்வாண்டின் போதும் மூன்றாம், இரண்டாம் மற்றும் அரம்ப மட்டத்தில் 07 பதவிகளுக்குரிய 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப மட்த்தில் 04 பதவிகளுக்கரிய 07 ஊழியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத 03 சனசமூக மண்ட 03 தொழிலாளர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### (ஆ) ஊழியர் கடன்

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கப்படுகின்றன.

(i) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 04 உத்தியோகத்தர்களுக்கு ஒருவருக்கு வழங்க கூடிய உயர்ந்த கடன்தொகையை மிகைத்து வழங்கப்பட்டிருந்தது.

(ii) சேவையை விட்டுச் சென்ற மற்றும் 02 மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 11,250 ஆன மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.3 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கப்படுகின்றன.

(அ) நீர்கொழும்பு வீதியில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் கீழ் மாடியில் தனியார் நிறுவனமொன்ற 2016 ஆம் ஆண்டிலிருந்து வியாபார நடவடிக்கைளை மேற்கொள்ளப்பட்டு வந்த போதும் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடமொன்றாக கருதி வருடாந்த பெறுமதி ரூபா 1,000 என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 வீதவரி மதிப்பீட்டின் பிரகாரம் நில மாடியுடன் 04 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றில் வெவ்வேறாக வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் வருடாந்த பெறுமதி வெவ்வேறாக காட்டப்பட வேண்டிய போதும் 04 மாடிகளும் ஒரு வீதவரி அலகாக மதிப்பீடு செய்யப்பட்டு வருடாந்த பெறுமதி ரூபா 277,558 எனக் காட்டப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

செயற்படாமை காரணமாக கெப் வண்டியொன்று, 06 மாத காலமாக வளவில் விளைவற்ற வகையில் காணப்பட்டது.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

உயிரியல் வாயு அலகு நிர்மாணிப்பதற்குரிய ரூபா 74,790 ஆன பெறுமதி சேர் வரியொன்று ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகை திட்டம்

பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் பெறுகை செயற்பாடுகளை காட்டும் விரிவான பெறுகை திட்டமொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு சபையின் சேவையில் ஈடுபட்டிருந்த 05 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்துதடுன் இந்த உத்தியோகத்தர்களுக்க சபையின் ஏனைய கடமைகள் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வின் சுதந்திரதன்மையொன்ற இல்லையென அவதானிக்கப்பட்டது

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 61,000 ஆன மொத்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 6,228,000 ஆன பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 3,977,611 அதாவது 64 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பாதீட்டு நிதி ஏற்பாடு செய்யப்படாதிருந்த 29 சமூக நல நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,154,154 செலவிடப்பட்டிருந்தது.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானங்களை சேகரிப்பதில் தாமதம் காணப்பட்டமை |
| | (ii) | நிலுவை வருமான அறிக்கை தயாரிப்பதில் தாமதம் |
| (ஆ) ஆவணங்கள் பேணப்படல் | | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்படாமை. |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | (ii) | சொத்துக்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |